III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.27/2021

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 05-03-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : தேம்பாவணி | Village | : |
| Father's / Husband's Name | : சுப்பிரமணியன் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 முதல் 13 வரையுள்ள பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

தாவா சொத்தை நான் கடைசியாக எப்பொழுது போய் பார்த்தேன் என்றால் 2017 அல்லது 2018 இருக்கலாம். நான் மற்றும் என்னுடைய அக்கா இருவரும் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். வெவ்வேறு இடத்தில் குடியிருந்து வருகின்றோம் என்றாலும் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த கால கட்டத்தில் தாவா சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டு சிலருக்கு அது விற்பனை செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எழுதி வைத்த உயிலை ரத்து செய்ய கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு உயில் இருந்ததே தெரியாது. உயில் இருக்கின்ற விவரம் எனக்கு சரியாக தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு உயில் இருந்த விவரம் தெரியுமா என்றால் அதை தெரிந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். ஏனென்றால் அந்த உயில் தப்பானது. தாவா சொத்தில் இருக்கின்ற கட்டிடத்தை முதல் பிரதிவாதியின் பிள்ளைகளும் அதனை விலைக்கு வாங்கியவர்களும் தான் அனுபவித்து வருகின்றார்கள் என்றால் இல்லை அவர்களும் இங்கு இல்லை அவர்கள் கல்யாணம் முடித்துவிட்டு வெளியில் போய்விட்டார்கள். தாவா சொத்தினை நான் அனுபவிக்கவில்லை என்றாலும் என்னுடைய அண்ணன் தான் அனுபவித்து கொண்டு வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்லி நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன்

என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் அதிகமாக செலுத்த வேண்டியிருக்கும் என்பதால் பொய் சொல்லி நான் குறைந்த நீதிமன்ற கட்டணத்தை கட்டியிருக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. உயிலை பற்றி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரிந்திருந்தும் அதனை நான் எனது வாதுரையில் மறைத்திருக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையான சங்கதிகளை மறைத்து நான் தாக்கல் செய்திருக்கின்ற இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயிலை ரத்து செய்ய கோரி நான் எந்த பரிகாரமும் கோராததால் அதன்பின்னிட்டு இந்த உயிலின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை நான் ரத்து செய்ய கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் தாவா சொத்து முதலாம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னாலும் அதனால் நான் தாவா சொத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**